புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# புறநானூற்றில் பெண்களின் வீரம்

*முனைவர் கோ. கமலா*
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி) திருப்பத்தூர்.*

**ஆய்வுச்சுருக்கம்:**

தமிழ்ச் சமுதாயத்தில் காதலுக்கு வீரமும், வீரத்திற்குக் காதலும் தூண்டுகோலாகிய காதலையும் வீரத்தையும் இருகண்களாகக் கொண்டது சங்ககாலம். இதன்பின்புலமாக எக்காலத்தும் சிறப்பு பெற்று அமைந்திருந்தவர்கள் பெண்கள்.

வீரவணக்கத்தைத் தனதாகக் கொண்டிருந்த வீரயுக சங்ககாலத் தமிழ்ச் சமுதாயத்தின் வழிபாட்டுக்குரிய வீரத்தை விதைப்பவர்களாக விளங்கியவர்கள் பெண்கள். ‘‘புண்ணே அதுவும் புகழின் கண்ணே’’ என்று வாழ்ந்த சங்ககால வீரர்களின் மரணத்தின்போது போர்க்களத்தில் வீரப்பெண்களின் பங்களிப்பை வெளிப்படுத்துவதுவது மூதின்முல்லை. வீரத்தின் விளைவாகக் கிடைத்தவற்றை வழங்கி, ஈசல் இசைபட வாழ்தலைப் போற்றிப் புகழ்ந்துரைக்கும் பாடினி – விறலியர் என்ற கலைஞர்களும், பெண்பாற்புலவர்களும், சங்ககால சமூகக் கலைஞர்பிரிவில் இடம்பெற்றிருந்தனர்.

**முன்னுரை:**

செம்மொழியாம் தமிழ்மொழி தரணியை உயர்வடையச் செய்த, மொழி. இலக்கியங்களில் முதன்மையாகச் சொல்லப்படுகின்ற சங்கஇலக்கியம் தான் தலைமையிடம் கொள்கிறது என்பது உலகம் அறிந்த உண்மை. சங்க இலக்கியத்தில் உள்ள உணர்வுகளுக்கு அகம் முதன்மையும் பிற உணர்ச்சிகளுக்கு இரண்டாமிடமும் கொடுத்து அகம் புறம் என்ற பாகுபாட்டை வகுத்துள்ளனர். உணர்வுகள் என்றாலே பெண்களை முன்னிலைப் படுத்தியுள்ளதையும் காணலாம். இந்த உணர்வுப்போக்குகள் தன் உடலால், செயல்களால் தானே உணரும் உணர்வு மற்றவர்களால் (மகன் தந்தை கணவன்) செய்யும் சாதனை வீரம் போன்றவற்றை உணரும் உணர்வும் பெரிதும் பெண்களையே சாரும். அகவாழ்க்கைக்கும் புறவீரவுணர்வுகளை அடிப்படையாகக் கொண்டே அகவுணர்வையும் அனுபவித்து வந்தார்கள். அதற்காகத் தன் பெற்றோரையும் தன் பிள்ளையையும் கூட இழக்கத் தயங்காத வீரவுணர்வுமிக்க பெண்களாகத் திகழ்கின்றதைப் புறநானூறு கொண்டு புலப்படுத்துகின்றது இவ்வாய்வுக் கட்டுரை.

**வீரக்குடி மகளிரின் பெருமை:**

மூதின் மகளிர் என்ற சொல்லுக்குப் பழமையான முதுகுடியில் பிறந்த மகளிர் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. வீரக்குடியில் பிறந்த இத்தகைய மகளிர் மூதின் மகளிர் எனப் போற்றப்பெற்றனர். தான் புகுந்த குடும்பத்திற்குப் புகழை, பெருமையைச் சேர்ப்பது போலத் தாம் பிறந்த குடிக்கும் வெற்றியும், புகழும், பெருமையும் விளைவிப்பாரும் இம்மகளிரேயாவர். தமிழ்நாட்டில் பண்டுதொட்டே பெண்களின் வீரப்பெருமிதத்தைப் புகழும் வழக்கம் நிலவியது. புறப்பொருட்துறையில் இது மூதின் முல்லை என்று கூறப்படுகிறது. கொல்லும் வேலினையுடைய வீரர்க்கு அல்லது மறக்குடியில் வந்த மடப்பத்தினையுடைய பெண்களின் வீரத்தைச் சிறப்பித்துக் கூறுவது மூதின் மகளிர் துறை என்று அழைக்கப்படும். பெண்கள் போர்க்களத்தில் நேரடியாகப்பங்கு கொள்ளாமல் மறைமுகமாகப் பங்கு கொண்டிருக்கின்றனர். இது பெண்களின் வீர உணர்வைப் புலப்படுத்துகிறது. வீரமகளிர் தம் வயிற்றில்

பிறந்த தமது பாலையுண்ட மக்கள் பெருவீரராகவும் மறங்குன்றாத மானமும் செறிந்த மாண்பும் உடையவராக இருக்கவேண்டும் என்று அக்காலத்தார் நினைத்தனர் என்று நடராசன் குறிப்பிடுகிறார்.[1] இவ்வாறு வீரமும் தியாகவுணர்வும் மிக்கவர்களை அக்காலச் சமுதாயத்தில் மூதின் மகளிர் என்று அழைத்தனர். ஆனந்தப்பையுள், உவகைக்கலுழ்ச்சி, தாபதநிலை, முதுபாலை, துறைகளில் இத்தகுபெண்களின் வீரவெளிப்பாடு பற்றி பேசப்படுகின்றது. இவைபோன்று புறப்பொருள் வெண்பாமாலையில் காணப்படும் தலைத்தோற்றம், உண்டாட்டு, வெறியாட்டு, சிருங்கார நிலை, மூதின்முல்லை, ஆனந்தப்பையுள், நாண்முல்லை, முதலான துறைகள் பெண்களின் வீரச்சிறப்பை உணர்த்துவனவாய் அமைகின்றன.

**போரில் பெண்களின் பங்கு:**

சங்க இலக்கியங்களில் பெண்கள் தலைவன் விழுப்புண் அடைந்த காலங்களில் காக்கும் பண்பினராகத் திகழ்ந்திருக்கின்றனர். தலைவன் போர்க்களத்தில் விழுப்புண்பட்டு தவித்த நிலையில் மனையுடை மகளிர் ஐயவிப் புகையூட்டிக் காஞ்சிப் பண்பாடி புண்ணை ஆற்றியும் உள்ளனர் என்பதனை இலக்கியங்கள் விவரிக்கின்றன. பெண்கள் போர்க்கலையில் சிறப்புப் பெற்றும் காவல் காக்கும் பணியிலும் இடம் பெற்றிருந்தனர். அரையில் கச்சை வாள் மார்பில் கவசம் பூண்டவராய் வில்வேல் முதலிய ஆயுதப் பயிற்சியுடையவராய் விளங்கினர்[2] என சண்முகம் பிள்ளை தம் நூலில் குறிப்பிடும் கருத்தின் மூலம் பெண்கள் பல்வேறு சூழ்நிலைகளில் போரின் போதும் தமது பங்களிப்பைச் செம்மையுறச் செய்திருக்கின்றனர்.

''அடல்வேலாடவர் கன்றியு மவ்வில்

மடரவன் மகளிர்க்கு மறமிகுந்தன்று''[3]

என்னும் அடிகள் பெண்களுக்கு வீரம் உள்ளதைக் குறிப்பிடுகின்றது. இத்தகைய வீரத்தின் நிலைகள் இருப்பின் பெண்கள் நேரிடையாகப் போரில் ஈடுபடவில்லை என்றாலும் வீரர்களுக்குப் பணிவிடை செய்தும் வீரவுரைகளைக் கூறியும் போரில் வெற்றிபெற வாழ்த்தியும் வீரச்செயல்களைப் போற்றியும் உள்ளனர்.

**மறக்குடித்தாய்:**

பெண்கள் புலமைத் திறத்திலும் மட்டுமல்லாது ஆடவர்களைப் போன்ற வீரமிக்கவர்களாகவும் நாட்டின் மீது பற்றுள்ளவர்களாகவும் காணப்பட்டனர். வீரமிக்க ஆண்மகனைப் பெற்றதில் அவர்கள் வீறுகொண்டனர். மகளிர் வாழ்க்கை மற அறமாகப் புறத்தில் போற்றப்பட்டது. ஒரு தாய் தன் மகனை வாழவைத்துப் பார்ப்பதில் தான் மிகந்த மகிழ்ச்சியடைவாள். ஆனால் இங்கு ஒரு தாய் தன் மகன் ஒருவன் களிறைக்கொன்று தானும் மாண்டான் என்று கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தவளாய் ஆனந்தக்கண்ணீர் விட்டாள் என்பதை,

''..............................சிறுவன்,

களிறு எறிந்துபட்டனன் என்னும் உவகை

ஈன்ற ஞான்றினும் பெரிதே'' (புறம் 277:2-4)

எனும் இப்பாடல் தவப்புதல்வன் சிறப்புற்று விளங்கும் நிலையில் வீரத்தாய் பெரிதும் மகிழ்ந்துள்ளாள் என்று குறிப்பிடுகின்றது. தன் மகன் சான்றோன் என்று கூறும்பொழுது தாய் மட்டுமே மிகுந்த மகிழ்ச்சி கொள்வாள் என்று திருவள்ளுவர்

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை

சான்றோன் எனக்கேட்ட தாய்''[4]

என்கிறார். பெற்ற தாய் தன்மகனை மற்றவர்கள் அனைவரும் சான்றோன் என்று கூறப் பெருமகிழ்ச்சியடைகின்றார். இதனால் குழந்தைகளின் வளர்ப்பு முழுவதும் தாயின் பொறுப்பே என்ற உண்மை வெளிப்படுகிறது.

பண்டைய காலத்தில் தாய்மார்கள் தம் தாய்த் திருநாட்டிற்காகத் தம் ஒரே மகனின் உயிரையே தியாகம் செய்யும் மானப்பான்மை உடையவர்களாகவும் வீடு என்ற நிலையில் தன் மகன் சிறப்புக்குரியவர்களாகவும் நாடு என்ற நிலை வந்தவுடன், வீரமே முக்கியமாகக் கருதிப் போருக்கு அனுப்பும் அளவிற்கு நெஞ்சுரம் வாய்ந்தவர்களாகவும், இவர்களைத்தான் மூதின் மகளிர் என்றும் அழைத்தனர். வீரத்தாயொருத்தி தன் செல்வச்சிறுவனைப் போருக்கு அனுப்புகின்ற பாங்கினை,

''கெடுக சிந்தை.........

வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்

பாறு மயிர்க்குடுமி எண்ணைய் நீவி

ஒருமகன் அல்லது இல்லோள்

செருமுகம் நோக்கிச் செல்க'' (புறம் 279 8-11)

இவ்வடிகள் மூதின் முல்லைத் துறையைச் சார்ந்ததாகும். முதல் நாள் தன் தந்தையை இழந்த அவள் அடுத்த நாள் தன் கணவனைப் போருக்கு அனுப்பும் வீரத்தாயின் குணப்பண்பை வெளிப்படுத்துகின்றது. நாட்டிற்காகக் கணவனை, தந்தையை இழந்தவள் போர் முரசு கேட்டவுடன் தான்பெற்ற பச்சிளம் பாலகனைச் சீராட்டிப் பொட்டு வைத்துப் போர்க்களத்திற்கு அனுப்பிவைக்கின்றாள். இப்பாடல் வெளிப்படுத்தும் இத்தாயின் வீரமும் நெஞ்சமும் போற்றத்தக்கதாகும். தன் உயிரோடு கலந்த உறவுளை இழந்து தன்நாடு தன் மன்னன் வெற்றிபெறவேண்டும் என்ற எண்ணம் உடையவர்களாகவே திகழ்ந்திருக்கின்றனர். இச்செய்தியினை புறப்பொருள்வெண்பாமாலையும்

''வந்தபடை நோனாள் வாயின் முலைபறித்து

வெந்திறல் எம்ஃகம் இறைக்கொளீஇ-முந்தை

முதல்வர்கல் தான்சாட்டி மூதில் வடவாள்

புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு (பு.வெ.மா.வாகை-21)

இச்செய்யுளின் வாயிலாக அறியமுடிகின்றது.

''கன்னினான் எந்தை கணவன் களப்பட்டான்

முன்னின்னு மெய்யவிந்தார் என்னையர்-பின்னின்று

கைபோய்க் களையுதைப்பக் காவலன் மேலோடி

ஏறபோற் கிடந்தானென் ஏறு'' (பு.வெ.மா வாகை-22)

என்ற பாடலடியின் வாயிலாக, ஒரு தாய் தன் மகன் போர்க்களத்தில் பகை மன்னர்களின் அம்புகள் பட்டுச் சறிந்து கிடந்ததைப் போன்று தன்மகன் வீரமரணம் அடைந்த நிலையைக் கண்டு பெருமிதம் கொள்வதை அறியமுடிகின்றது. அக்காலப் பெண்டிர் தான் பெற்ற புதல்வர்களை விடத் தன் தாய்த் திருநாட்டின் மீதும் நாட்டின் அரசன் மீதும் அளவுகடந்த பற்றும் வீரமும் மானமும் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். தொல்காப்பியர் மறத்தொழிலைச் சிறப்பித்தும் பெண்களின் வீரத்தையும்

''மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த

கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே''

என்ற நூற்பாவின் வழி குடிநிலை என்ற சொல்லுக்கு மகளிர்க்கும் மைந்தர்க்கும் வீரம் பொதுவான தன்மையானது என்று வெளிப்படுத்தியுள்ளார்.

**வீரத்தாய்:**

பண்டைய காலங்களில் போர்க்களங்களில் சிறப்பாகப் போரிட்டு வீரமரணம் அடைவது அனைவராலும் போற்றப்பட்டது. வீரத்தை மரணத்திற்கு இணையாகக் கருதினர் பெண்கள். நேரடியாகப் போரில் பங்கு கொள்ளும் நிலை அக்காலங்களில் காணப்படவில்லை. தன் தாய்நாட்டிற்காகத் தன்னால் முயன்ற அனைத்து உதவிகளையும் செய்தனர். தன் நாட்டிற்காகவும் நல்ல புதல்வர்களைப் பெறுவதே தங்களது கடமையாக எண்ணினர். இதனை,

''ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே''

என்ற புறப்பாடல் உணர்த்துகிறது. புதல்வர்களைப் பெற்று வளர்ப்பதுடன் மட்டும் தன்கடமை முடிந்துவிடாமல் தாய்ப்பாலுடன் உணவாக நாட்டுப்பற்றையும் ஊட்டி வளர்த்தனர். இதனால் தன் நாட்டு அரசன் வெற்றியடையவேண்டும் என்ற எண்ணமும் நாட்டைக் காக்கவேண்டும் என்ற கடமையும் வீரமும் அவர்களுக்கு ஏற்படும் என்று நம்பினர்.

பண்டைய வீர மரபில் தோன்றிய வீரத்தாய்மார்கள் வீரமிக்க புதல்வர்கள் போர்க்களத்தில் புறமுதுகைக்காட்டினர் என்ற சொல்லைக் கேட்காதவர்களாயும் அத்தன்மை தமக்கு வந்துவிடக்கூடாது எனவும் கருதியிருக்கின்றனர். இதனைக் காக்கைப்பாடினியார்,

''மாண்ட மர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டான்

……படுமகன் கிடக்கை காணூஉ

ஈன்ற ஞான்றினும் பெரிதும் உவந்தனளே'' (புறம்: 278.4-9)

வீரப்பண்பையும், வீரத்துடன் வெளிப்படுத்தியுள்ளார்.

வீரமிக்க புதல்வனைப் பெற்ற தாயிடம் உன்மகன் போர்க்களத்தில் புறமுதுகிட்டான் என்று கூறக்கேட்ட அத்தாயானவள் கண்கள் சிவக்கக் கடுஞ்சினத்துடன் என் மகன் போர்க்களத்தில் புறமுதுகிட்டான் என்றால் அவனுக்கு உணவூட்டிய மார்பகத்தை அறுத்து எறிவேன் என்று வாளோடு கோபத்துடன் போர்க்களத்திற்குச் சென்றாள்.

ஆனால் அங்கே தன் மகன்உடல் சிதைந்து மார்பில் புண்பட்டு வீரமரணம் அடைந்த நிலையைக் கண்டாள். அவனைப் பெற்றபோது, தான் பெற்ற மகிழ்ச்சியைவிட பன்மடங்கு தன் தாய் நாட்டிற்காக உயிரை இழந்ததை எண்ணிப் பெரிதும் மகிழ்ந்தாள். அக்காலப் பெண்கள் நாட்டுக்காக உயிர் விடுவது பெரும் பேறாகக் கருதினர்.

மறக்குலப் பெண் தன் கணவன் இறந்த செய்திகேட்டு வீரப்புண்பட்டு இறந்ததைப் பார்க்கப் போர்க்களம் செல்கின்றதை,

''வெந்தொழிற் கூற்றமும் நாணிந்து வெங்களத்து

வந்த மறவர் கைவாள் துமிப்பப் - பைந்தொடி

ஆடரிமா அன்னான் கிடப்ப அகத்து வகை

ஓரிடக் கண் நீர்பா யுக'' (பு.வெ.மா.உவகைக்கலுழ்ச்சி-25)

இவ்வடிகளின் வாயிலாகப் போர்க்களத்தில் பகைவர்களை வீழ்த்தி மார்பில் புண்பட்டு வெற்றியையுடைய அரிமா போன்று கிடப்பதைக் கண்டு அவ்வீரனின் மனைவியானவள் பெரிதும் மகிழ்ச்சிப் பெருக்கினால் கண்ணீர் விடுகின்றாள் என்பதற்குப் புறப்பொருள் வெண்பாமாலை சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

பாசறையின் கண்ணே போர்க்குச் சென்ற வீரமகன் பகைவீரர்களை அழித்தும் தானும் மாண்டான். அதைக் கண்ட அவ்வீரனின் தாய் மிகவும் மகிழ்ச்சி அடைந்ததும் அவளின் வற்றிய மார்பகங்களில் இருந்து பால் ஊறிச்சுரந்தமையை ஔவையார்,

''வருபட போழ்ந்து வாய்ப்பட விலங்கி

வாடு முலைஊறிச் சுரந்தன ஓடாப் பூட்கை விடலைத்தாய்க்கே''

இவ்வடிகளின் கண் உணரலாம். மற்றுமொரு பாடலில்,

''ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்

களிறெறிந்து  பெயர்தல் காளைக்குக் கடனே''

என்ற அடிகளில் சிறந்த மகனின் கடமையாவது கையில் வாள்கொண்டு பெரிய போர்க்களத்தில் போர் செய்து யானைகளை வீழ்த்தி வெற்றியோடு திரும்பி வருதலே ஆகும். ஒவ்வொரு ஆண்மகனும் போர்க்களத்திற்குச் சென்று போரிட்டு வெற்றி பெற வேண்டும் என்றும், போரில் வீரமரணம் அடையவேண்டும் என்பதும் அக்காலச் சமுதாயத்தின் பெண்களுக்குப் புற மரபாகக் கருதப் பட்டிருக்கின்றது.

**முடிவுரை:**

நாட்டுப்பற்றும் அரசன் மீது நம்பிக்கை கொண்ட பற்றும் கணவனின் வீரத்தின் மீது கொண்ட நம்பிக்கையையும் கொண்டு சங்ககாலப் பெண் வாழ்ந்திருக்கின்றாள். மூதின் மகளிர் என்று கூறப்படுபவர் மகளிர் வீரத்தின் நிலைக்களமாகவும் வீரச்செயல்களின் அமைவிடமாகவும் திகழ்ந்தனர்.

வீரமக்களின் தாய்மார்கள் வெற்றித்திருவின் வீரவடிவமாக விளங்கும் தம்மக்கள் மறங்குன்றாத வாழ்வையே விரும்பிவேண்டியது வியக்கத்தக்க ஒன்றாகும். பெண்கள் நாட்டுப்பற்றிலும் வீரத்திலும் பல்வேறு நிலையில் அக்காலத்தில் பெருமையும் சிறப்பும் பெற்று விளங்கினர்.

மேற்கோள்:

1. நடராசன்(ஔவை) ''புலமைச் செவ்வியர்'' சென்னை. ப.எண்.19.
2. மேலது.ப.19
3 சண்முகம்பிள்ளை மு. ''சங்கத்தமிழ் வாழ்வியல்'' உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம். ப.112
4. பரிமேலழகர்.(உ.ஆ) திருக்குறள் ப.30.

**பார்வை நூல்கள்:**


1. சுப்பிரமணியன். ந. ''சங்ககால வாழ்வியல்'' நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.2010
2. கைலாசபதி. க. ''தமிழ் வீரநிலைக் கவிதை'' குமரன் புத்தக இல்லம். கொழும்பு. சென்னை. 2006.
3. சுரளா இராசகோபாலன். ''சங்கத்தமிழ் வளர்த்த நங்கையர்'' ஒளிப்பதிப்பகம் சென்னை. 1996
4. நயினார்.சு. ''தெற்கத்திப் படைப்புலகம்'' பாலபாரதி பதிப்பகம் சிவகாசி -2010.


********* ********* ********** ********* ********* ********** ********** **********